

முதலமைச்சரும் கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்களை தஞ்சை வடக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.கல்யாணசுந்தரம் எம்.பி. தமது பிறந்த நாளை முன்னிட்டு சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், அண்மையில் மறைந்த முன்னாள் தலைமைச் செயலாளர் சபாநாயகம் அவர்களின் சென்னை, ராஜா அண்ணாமலைபுரத்திலுள்ள இல்லத்திற்கு நேற்று (24.6.2023) நேரில் சென்று, அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ. ராசா, சட்டமன்ற உறுப்பினர் த.வேலு ஆகியோர் உடனிருந்தனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.06.2023) மேயர் ராதாகிருஷ்ணன் ஸ்டேடியத்தில் நடைபெற்று வருகின்ற புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகளை அதிகாரிகளுடன் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, ஆகியோர் உடனிருந்தனர்.

### கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி கோரிக்கையை ஏற்று

# பாலக்காடு, ராமேஸ்வரம், நாகர்கோயில் உள்ளிட்ட 3 அதிவேக ரயில்கள் ராசிபுரத்தில் நின்று செல்லும்!

## தென்னக இரயில்வே அறிவிப்பு!

நாமக்கல், ஜூன் 25-

நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கோரிக்கையை ஏற்று ராசிபுரம் இரயில்வே நிலையத்தின் மார்க்கமாகச் செல்லும் இரயில்கள் ராசிபுரத்தில் நின்று செல்லும் என தென்னக இரயில்வே அறிவித்துள்ளது.



நாமக்கல் மாவட்டத்தில் அமைந்துள்ள சுற்றுலாத் தலங்களில் ஒன்றான கொல்லிமலைக்குச் செல்வதற்கான முக்கிய சந்திப்பு இராசிபுரம் இரயில்வே நிலையமாகும். இதை தவிர இராசிபுரம் பட்டு, சாஹோ மற்றும் கோழிப்பண்ணை போன்ற பல்வேறு வணிகங்களுக்கான முக்கிய மையமாகவும் இந்நிலையம் உள்ளது. இங்கு தற்பொழுது மிக குறைவான இரயில்களே நிறுத்தப்படுகின்றன. இராசிபுரம் இரயில்வே நிலையத்தில் கோவிட் 19 பெரும் தொற்றிற்கு முன் நிறுத்தப்பட்ட இரயில்கள் அதன் பின்பும் நிறுத்தப்படவில்லை. மேலும் அருகில் உள்ள இரயில்வே நிலையங்களுக்குச் செல்ல வேண்டி உள்ளதால், மக்கள் பெரிதும் சிரமப்பட்டு வருகிறார்கள்.

எனவே, ராசிபுரம் மக்களின் நீண்ட நாள் கோரிக்கைகளை ஏற்றும், மக்களின் முன்னேற்றத்திற்காகவும் 22651சென்னை - பழனி விரைவு இரயில், 17236 நாகர்கோவில் - பெங்களூர் விரைவு இரயில், 16339/16340நாகர்கோவில் - மும்பை விரைவு இரயில், 11021/11022 - தாதர் - திருநெல்வேலி விரைவு இரயில் ஆகிய இரயில்கள் ராசிபுரம் இரயில்வே நிலையத்தில் நின்று செல்வதற்கு நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கடந்த 15.06.2023 அன்று ரயில்வே துறை அமைச்சர் மற்றும் ரயில்வே வாரிய தலைவர் அனில்குமார் லகாடியைச் சந்தித்து கோரிக்கை விடுத்திருந்தார்.

இதையடுத்து, கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி கொடுத்த கோரிக்கையை ஏற்று தற்போது, வண்டி எண் : 16733/16734 ராமேஸ்வரம் - யோகா ராமேஸ்வரம் விரைவு வாரந்திர இரயில் இராசிபுரம் வழித்தடத்தில் வாரம் ஒருமுறை காலை 11.58 மணிக்கு நின்று செல்லும் எனவும் சனிக்கிழமை காலை திருப்பதி செல்வதற்கு காலை 5.50 மணிக்கு நின்று செல்லும் எனவும்,

அதேபோல் வண்டி எண் : 22651 சென்னை - பாலக்காடு எக்ஸ்பிரஸ் இரயில் பழனி வழியாக இராசிபுரத்தில் காலை 3.27 மணிக்கும், வண்டி எண் : 17236 நாகர்கோயில் - பெங்களூர் செல்லும் இரயில் காலை 3.31 மணிக்கு இராசிபுரத்தில் நின்று செல்லும் என தென்னக இரயில்வே அறிவித்துள்ளது. இந்த அறிவிப்பால் ராசிபுரம் பகுதி பட்டு, சாஹோ மற்றும் கோழிப்பண்ணையாளர்கள், வர்த்தகர்கள், பொது மக்கள் என அனைவரும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

### முதலமைச்சர் கோப்பை - 2023 மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள்!

# ஜூன் 30-ஆம் தேதி நேரு உள்விளையாட்டு அரங்கில் நடைபெறுகிறது!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்!

சென்னை, ஜூன் 25-

முதலமைச்சர் கோப்பை - 2023 மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள் தொடக்க விழா 2023 ஜுன் மாதம் 30-ஆம் தேதி அன்று சென்னை நேரு உள் விளையாட்டு அரங்கத்தில் நடைபெறுகிறது. இந்த விழாவினை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைக்கிறார்.

44வது செஸ் ஒலிம்பியாட் போட்டியின் நிறைவு விழாவின் போது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் கபடி, சிலம்பம் உட்பட 15 விளையாட்டுகளில் பள்ளி, கல்லூரி, பொதுப்பிரிவு, அரசு ஊழியர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு நடத்தப்படும் என அறிவித்தார்கள். அந்த வகையில் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் பிப்ரவரி 2023-ஆம் மாதம் முதல் வாரத்தில் தொடங்கி மார்ச் 2023-ஆம் மாதம் முடிய நடைபெற்றது.

இந்த மாவட்ட அளவிலான போட்டிகளில் மூன்று இலட்சத்து எழுபத்து ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட வீரர் மற்றும் வீராங்கனைகள் கலந்து கொண்டனர். மாவட்ட அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்ற 27,000க்கும் மேற்பட்ட வீரர் மற்றும் வீராங்கனைகள் மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள தேர்வு செய்யப்பட்டனர்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் சென்னையில் 17 இடங்களில் ஜூலை 01ந் தேதி முதல் ஜூலை மாதம் 25-ந் தேதி வரை முதலமைச்சர் கோப்பை மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ளது.

இந்த போட்டிகளில் பங்கேற்கவுள்ள 27,000க்கும் மேற்பட்ட வீரர் வீராங்கனைகள், பயிற்றுநர்கள், நடுவர்கள், அலுவலர்கள் மற்றும் தேசிய மாணவர் படை தன்னார்வலர்கள் அனைவருக்கும் போட்டி நடைபெறுகின்ற அனைத்து நாட்களிலும் தங்குவதற்கு வசதியாக தனியார் விடுதிகள் மற்றும் அரசு விருந்தினர் மாளிகை ஆகியவைகளில் 2000க்கும் மேற்பட்ட அறைகள் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. மேலும் மேலக்கோட்டையூரில் உள்ள தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத்தில் உள்ள மாணவ மாணவியர் விடுதிகளில் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் போட்டி நடைபெறும் அனைத்து நாட்களிலும் மூன்று வேளை உணவு மற்றும் சிற்றுண்டி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. போட்டி நடைபெறும் இடங்களில் காவல்துறை மூலம் உரிய பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்படவுள்ளது. வீரர் வீராங்கனைகள் போட்டி நடைபெறும் இடங்கள் மற்றும் தங்கும் விடுதிகளுக்கு செல்ல பேருந்து வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், அனைத்து இடங்களிலும் மருத்துவ வசதி ஏற்பாடுகள் சிறந்த முறையில் மேற்கொள்ள அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளது. போட்டிகளை சிறப்பாக நடத்திட ஏதுவாக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகம், மாநகர போக்குவரத்து கழகம், பெருநகர சென்னை மாநகராட்சி, மருத்துவம் மற்றும் பொது சுகாதாரத்துறை மற்றும் காவல் துறை ஆகிய துறைகளுடன் இணைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.




உலக புலம்பெயர்ந்தவர்களின் தினத்தையொட்டி, சென்னையில் உள்ள செம்மொழி பூங்காவில் இரு தினங்கள் நடைபெற இருக்கும் புலம்பெயர்ந்தவர்களின் உணவுத் திருவிழாவினை திமுக துணைப் பொதுச்செயலாளரும், திமுக நாடாளுமன்றக்குழு துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. துவக்கி வைத்தார். உடன், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான், மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு, சட்டமன்ற உறுப்பினர் எழிலன், மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் ஜெசிந்தா லாசரஸ் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.


